நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42-ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 187/2017

## P.W.2 -ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சக்திவேல் |
| தந்தை / கணவர் பெயர் | : | ஆறுமுகம் |
| கிராமம் | : | போரைமேடு |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW2** |
| வயது | : | 28 |

*1969-ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969-ஆம் வருடத்திய 44-வது மத்திய சட்டம் )-ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026-ஆம் வருடம், பிப்ரவரி மாதம், 05-ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:- 12.40 PM

1. நான் தற்போது போரைமேட்டில் குடியிருக்கிறேன். நான் பெயிண்டிங் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரி என் ஊரைச்சேர்ந்தவர். வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. எதிரியின் மீது என்ன வழக்கு என்று தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

2. **சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. ஆஜர் எதிரி எங்கள் ஊரைச்சேர்ந்தவர் என்றால் சரிதான். எதிரி தன்னை மருத்துவர் என்றுச்சொல்லி எங்களுடைய கிராமத்திலும் அருகிலுள்ள கிராமத்திற்கும் சென்று ஆங்கில மருத்துவம் பார்த்து வந்தார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.
2. நானும் எதிரியிடம் சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. 18.05.2017 ம் தேதி கொளத்தூர் காவல் ஆய்வாளர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோர் எதிரியின் வீட்டிற்கு வந்து அவரிடம் சிகிச்சை பெற்ற கோவை மேட்டுபாளையத்தை சேர்ந்த ஒருவர் சிகிச்சை பெற்று அவருக்கு பக்க விளைவுகள் ஏற்பட்டு போலீசில் புகார் கொடுத்துள்ள விவரத்தை என்னிடம் தெரிவித்திருந்தார் என்றால் சரியல்ல.
3. எதிரி முறைப்படி மருத்துவம் படிக்காமல் தன்னை மருத்துவர் என்றுசொல்லி பொதுமக்களை ஏமாற்றி பணம் பெறும் நோக்கத்துடன் சிகிச்சையளித்து அதனால் பலர் பக்க விளைவுகளை விளைவித்தார் என்று எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. எதிரி எனது ஊரைச்சேந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–** இல்லை.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 12.45PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**